வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P.1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 11.11.2024 திங்கட்கிழமை | இதழ் : 315 | பக்கங்கள் : 12

# அரசியல் கைதிகளை விடுவிப்போம் மக்களின் காணிகள் வழங்கப்படும்!

## வடக்கில் ஜனாதிபதி அநுரகுமார உறுதிமொழி



யாழ்ப்பாணம், நவம்பர் 11
சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அரசியல் கைதிகளை விடுவிப்பதுடன், மக்களின் காணிகளை விரைவில் விடுவிப்போம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்கள் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் நேற்று இடம்பெற்றன. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த தேர்தலில் பிரசாரத்திற்காக இந்த மாவட்டத்துக்கு வந்தார்.

வன்னி மக்கள் ஓரளவு வாக்கை அவருக்கு வழங்கியிருந்தனர்.

இந்த தேர்தலில் அவர் வருவாரா? அதேபோல எதிர்க்கட்சி தலைவராக இருந்த சஜித் பிரேமதாசவும் வந்தார்.

11

## பாடசாலை மாணவர்களுக்கு சீனாவின் சீருடைத் துணிகள்

### யாழில் கூறினார் ஜனாதிபதி அநுர

யாழ்ப்பாணம், நவ. 11
இலங்கை முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு சீன நாட்டிலிருந்து சீருடை துணி வழங்கப்பட உள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பாசையூர் பகுதியில் இடம்பெற்ற தேசிய மக்கள்

11

## மின் கட்டண திருத்த யோசனையை வழங்க இரண்டு வாரங்கள் தேவை!

### இலங்கை மின்சார சபை

கொழும்பு, நவ. 11
மின்சாரக் கட்டணத்தை குறைப்பது தொடர்பான புதிய யோசனையை முன்வைப்பதற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மேலும் 2 வார கால அவகாசம் கோரியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

11



## முட்டை விலை 1,000 ரூபாவாகும்!

### ரணில் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 11
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக யானை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பாவிட்டால் முட்டையின் விலை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமென முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க

11

## பொலிஸ்மா அதிபர் சென்ற சில மணிநேரத்தில் சுன்னாகம் பொலிஸார் புரிந்துள்ள அராஜகம்!

### சாடுகின்றார் ஜோஸப் ஸ்டாலின்



- பு.கஜிந்தன் -
யாழ்ப்பாணம், நவ. 11
சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு பதில் பொலிஸ் மா அதிபர் வருகை தந்து சென்ற சில மணி நேரத்தில் இடம்பெற்ற அராஜகத்துக்கு நீதி வழங்கப்படவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில்

11

## சுன்னாகத்தில் பொலிஸ் அராஜகம் பக்கச்சார்பற்ற விசாரணை நடக்கும்

### உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜருள்

யாழ்ப்பாணம், நவ. 11
சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற விபத்து சம்பவத்தை தொடர்ந்து பொலிஸார் நடந்து கொண்ட விடயம் தொடர்பில் விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ். எம். ஜருள் தெரிவித்துள்ளார்.

11




## தேர்தல் பிரசாரப் பணிகள் இன்று நள்ளிரவுடன் நிறைவு

கொழும்பு, நவ. 11
எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் இன்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைவதாக, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக் குழு அலுவலகத்தில் நேற்று

11

## அனைத்துலக அமைப்பு ஒன்றின் பதவியை எதிர்பார்க்கும் ரணில்!

கொழும்பு, நவ. 11
அனைத்துலக அமைப்பு ஒன்றின் பதவியினை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்து காத்திருப்பதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் அரசியல் பத்தியில்

11




## அடுத்த வாரம் இலங்கை வரும் சர்வதேச நாணய நிதியக் குழு!

கொழும்பு, நவ. 11
சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான கடன் வசதியின் கீழான மூன்றாவது மீளாய்வு பணிகளை மேற்கொள்வதற்காக பீட்டர் ப்ரூவர் தலைமையிலான நாணய நிதியப் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்த மீளாய்வு பணிகளின் முன்னேற்றத்தின் பின்னர், சர்வதேச நாணய நிதியம் அடுத்த கடன் தவணையை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

இதன்படி அடுத்த வாரம் நாட்டுக்கு வருகை தரும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, தற்போதைய அரசாங்கத்தின்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பஸ்தர்மீது பொலிஸார் மூர்க்கத்தனமாக தாக்குதல்!

## குழந்தையை தூக்கிவீசி அராஜகம் இளம் தாய் பரபரப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 11

பச்சிளம் குழந்தையை தூக்கி வீசி, இளம் தாய் மீதும் அவரது கணவர் உள்ளிட்டவர்கள் மீதும் சுன்னாகம் பொலிஸார் மூர்க்கத் தனமாக தாக்குதல் நடத்திய தாக பாதிக்கப்பட்ட பெண் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் தமது வாகனத்தில் குடும்பத்தினர் பயணித்துக் கொண்டிருந்த வேளை, அவர்களது வாகனத்தை மோட்டார் சைக்கிளில் முந்தி சென்றவர்கள் வாகனத்துக்கு முன்பாக தடுமாறி விழுந்து விபத்துக்கு உள்ளாகினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சிவில் உடையில் வந்த பொலிஸார், வாகன சாரதியுடன் முரண்பட்டு, அவரை தாக்கியுள்ளனர்.

இதன்போது வாகனத்தில் இருந்த அவரது மனைவி இரண்டு மாதங்கள் ஆன தனது குழந்தையுடன் இறங்கி கணவன் மீது தாக்குதல் நடத்தியவர்களை தடுக்க முற்பட்ட வேளை அவரது கையில் இருந்த குழந்தையைப் பறித்து எறிந்து தாயையும் தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் பொதுமக்கள் கூடியதும், சீருடையில் வந்த பொலிஸார் வாகனத்தையும் வாகனத்தில் இருந்தவர்களையும் வாகனத்துடன் பொலிஸ் நிலையம் அழைத்து சென்று, தாக்குதலுக்கு இலக்கானவர்களை கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவரின் மனைவி தெரிவிக்கையில்,

நாங்கள் வாகனத்தில் பயணித்துக் கொண்டிந்த வேளை, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் எம்மை முந்தி சென்று விபத்துக்குள்ளானர்கள். அவர்கள் மதுபோதையில் இருந்தமையால், நாங்களும் வாகனத்தை நிறுத்தி விட்டு, இருந்தோம்.

அப்போது சிவில் உடையில் வந்தவர்கள் எனது கணவரிடம் சாரதி அனுமதிப் பத்திரம், வாகன ஆவணங்களை கேட்டிருந்தனர். சிவில் உடையில் உள்ள உங்களுக்கு அதனை காண்பிக்க தேவையில்லை. விபத்து நடந்துள்ள இடத்துக்கு போக்குவரத்து பிரிவு பொலிஸாரை வரவழையுங்கள் என கூறினார்.

அதற்கு சிவில் உடையில் வந்திருந்தவர்கள் எனது கணவனை மூர்க்கத்தனமாக தாக்கினர். அதனைத் தடுக்க சென்ற என்னையும் தாக்கி, எனது இரண்டு மாத குழந்தையையும், என் கையில் இருந்து பிடுங்கி எறிந்தனர்.

பின்னர் சீருடையில் வந்த பொலிஸார் வாகனத்தை பொலிஸ் நிலையம் எடுத்து சென்றதுடன் எனது கணவரையும் கைது செய்தனர் என தெரிவித்தார்.

அதேவேளை சம்பவ இடத்திற்கு சென்ற சட்டத்தரணி மணிவண்ணன், பார்த்திபன் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஆதரவாக நின்றிருந்தனர்.

சட்டத்தரணி மணிவண்ணன், பொலிஸ் நிலையத்தினுள் சென்று கைது செய்யப்பட்டிருந்தவரை பார்வையிட்டு, சம்பவம் தொடர்பில் நேரில் கேட்டறிந்து கொண்டார். (எ)

## தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன? யாழில் நடைபெற்ற மக்கள் மன்றம்

யாழ்ப்பாணம், நவ. 11

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மக்கள் மன்ற கூட்டமொன்று அதன் தலைவர் வி. எஸ். சிவகரன் தலைமையில் யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

பாராளுமன்றத் தேர்தலில் உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்? தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன? எனும் தொனிப் பொருளில் இந்த மக்கள் மன்றம் நடைபெற்றது.

இதன்போது, தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டனர்.

இந்தக் கூட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், சுயேச்சைக் குழு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா, தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் வி. மணிவண்ணண், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறீகாந்தா ஆகியோர் அரசியல் பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர்.

சிவில் சமூகம் சார்பில் ஜெயக்குமார் அடிகளார், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர் கலாநிதி விக்னேஸ்வரன், சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

## யாழ்ப்பாணத்தில் கனமழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றர் அளவில் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.(எ)

## மற்றொரு சொகுசு கார் பறிமுதல்!

கொழும்பு, நவ. 11

கம்பஹா, கிம்புலாபிட்டிய விமான நிலைய வீதியிலுள்ள வீடொன்றில் இருந்து அடையாளம் தெரியாத சொகுசு கார் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

நீர்கொழும்பு பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வாகனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் வாகனம் கட்டான பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

வாகனத்தின் உரிமையாளர் தொடர்பான குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (ஐ)

## பிரிக்ஸ் உறுப்புரிமை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக பொய் பிரசாரம்

கொழும்பு, நவ. 11

பிரிக்ஸ் உறுப்புரிமைக்கான இலங்கையின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக சில உள்ளூர் ஊடகங்களில் வெளியான தவறான செய்திகள் குறித்து வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

2024 ஒக்ரோபர் 7 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டபடி, இலங்கை பிரிக்ஸ் மற்றும் புதிய அபிவிருத்தி வங்கியில் அங்கத்துவத்திற்கு விண்ணப்பித்தது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளில் உள்ள தனது சகாக்களுக்கு கடிதம் மூலம் இலங்கையில் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இது தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

2024 ஒக்ரோபர் 22-24 ஆம் திகதிகளில் ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டில், வெளியுறவுச் செயலர் அருணி விஜேவர்தன, இலங்கைத் தூதுக்குழுவின் தலைவராக இதற்கான இலங்கையின் ஆர்வத்தை வெளியிட்டார்.

அதே சமயம் பிரிக்ஸில் உலகளாவிய தெற்கின் நாடுகளின் கணிசமான ஆர்வத்தை வெளியிட்டது.

இலங்கை உட்பட பல நாடுகளின் பிரிக்ஸ் உறுப்புரிமைக்கான நிலுவையிலுள்ள கோரிக்கைகள் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளால் உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும்.

புதிய அபிவிருத்தி வங்கியில் இணைவதற்கான இலங்கையின் நோக்கத்தை தேசிய அபிருத்தி வங்கியின் தலைவர் வரவேற்றார்.

வெளிவிவகார அமைச்சு சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுடன் இணைந்து இது தொடர்பான நடைமுறைகளை மதிப்பாய்வு செய்யும்.

இலங்கையின் பிரிக்ஸ் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்று சில உள்ளூர் ஊடகங்களில் வெளியிடப்பட்ட அறிக்கையில் எந்த உண்மையும் இல்லை.

2024 நவம்பர் 6 அன்று அமைச்சரவைக்கு பிந்தைய ஊடகவியலாளர் மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் தவறாக சித்தரிக்கப்பட்டமை வருத்தமளிக்கிறது - என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.11.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உற்சாகம் குன்றிய தேர்தல் பிரசாரங்கள்

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று இரு மாதங்களுக்குள்ளாக பாராளு மன்ற தேர்தல் நடைபெறுவதால் பிரசாரங்கள் பெருமளவுக்கு உற்சாகம் குறைந்தவையாகவே காணப்படுகின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாப னத்தில் தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு உறுதியான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைக்க ஆணை தரு மாறு மக்களைக் கேட்கிறார். எதிரணி கட்சிகளைப் பொறுத்தவரை மக்களிடம் எதைச் சொல்லி வாக்கு கேட்பது என்று தெரியாமல், ஒன்றரை மாத கால அரசாங்கத்தை குறை கூறுவதை தவிர எதையும் செய்ய முடி யாமல் இருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலில் கண்ட தோல்வியின் பாதிப்பில் இருந்தும் எதி ரணி கட்சிகள் மீண்டு இன்னொரு தேசிய தேர்தலுக்கு தங்களைத் தயார் படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகுவதற்கு முன்னதாக பாராளு மன்ற தேர்தலை நடத்துவது வெற்றியின் உற்சாகத்தில் இருக்கும் தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பாக அமையும் என்று ஜனாதிபதி திஸநாயக்க நம்பிக்கை கொண்டிருக்கக்கூடும்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற் பாட்டு அமைப்பின் (பவ்ரல்) நிறைவேற்று பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராச்சி தேர்தல் நிலைவரம் குறித்து வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் கவனத்துக்குரியவையாக இருக்கின்றன.

பாராளுமன்ற தேர்தலில் அரசியல் கட்சிகளையும் சுயேச்சைக் குழுக் களையும் சேர்ந்த மொத்தம் 8,821 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும், ஆயிரத்துக்கும் குறைவான வேட்பாளர்களே தீவிரமான பிர சாரங்களில் ஈடுபடுவதாக ஹெட்டியாராச்சி கூறியிருக்கிறார்.

"ஒன்றுக்குப் பின் ஒன்றாக மிகவும் குறுகிய காலத்திற்குள் தேர்தல்க ளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதால் அரசியல் கட்சிகள் நெருக்கு தல்களுக்கு உள்ளாகியிருக்கின்றன. இந்த நெருக்குதல்களின் பிரதி பலிப்பே பிரசாரங்களில் காணப்படும் சோர்வாகும். இந்த தேர்தலில் மக் கள் மத்தியிலும் உற்சாகத்தை பெரிதாக காணமுடியவில்லை.

"பாரம்பரியமான அரசியல் கட்சிகள் மீது மக்கள் வெறுப்படைந்திருக்கி றார்கள். அத்துடன் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த அந்த கட்சி களுக்கு முன்னர் நிதியுதவி செய்தவர்கள் தற்போது அவ்வாறு செய்யத் தயாராயில்லை. அதனால் பல கட்சிகள் பிரசார நடவடிக்கைகளுக்கு போதிய பணம் இல்லாமல் தடுமாறுகின்றன. தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் சுமார் 6 இலட்சம் பிரசார அலுவலகங்களை திறப்பதற்கு அனுமதிக்கப்பட்ட போதிலும், சுமார் 9,200 அலுவலகங்களே நாடுபூராவும் திறக்கப்பட்டிருக்கின்றன" என்று பவ்ரல் தலைவர் கூறியிருக்கிறார்.

இலங்கையின் ஒரு கோடி 70 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர் களில் சுமார் 35 இலட்சம் பேர் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கவில்லை. இரு வருடங்களுக்கு முன்னரான மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு முறைமை மாற்றத்தை விரும்பிய மக்கள் அமோகமாக வாக்களிப்பில் கலந்து கொள் வார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. மாற்றத்துக்கான வேட்பாளராக நோக்கப்பட்ட திஸநாயக்கவுக்கு கூட 42 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைக்கவில்லை.

அதனால், தேர்தல் செயன்முறைகளில் மக்கள் பெருமளவுக்கு சலிப் படையத் தொடங்கியிருக்கிறர்கள் போன்று தெரிகிறது. ஜனாதிபதி தேர்த லில் வாக்களிக்காதவர்களையும் விட கூடுதலான தொகையினர் இன்னும் இரு நாட்களில் நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் வாக்களிக்கா மல் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இதற்கிடையில், இன்னும் இரு மாதங்களில் அதாவது ஜனவரியில் (நீண்ட காலமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கும்) உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்த கையோடு தொடங்கவிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலை வர் அறிவித்திருக்கிறார். மாகாண சபை தேர்தல்களையும் அடுத்த வரு டம் நடத்தப்போவதாக ஜனாதிபதி திசாநாயக்க சில தினங்களுக்கு முன் னர் அறிவித்தார்.

அந்த தேர்தல்களில் வாக்களிப்பு வீதம் மேலும் குறையும் ஆபத்து இருக்கிறது.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2024**

"நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்."
- ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கையியலாளர்)



# வடக்கில் பணியாற்றிய காலத்தை பொன்னான காலமாக பார்க்கிறேன்

## பதில் பொலிஸ் மா அதிபர் யாழில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 11

"நான் 9 மாத காலம் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றினேன். அந்த காலத்தை ஒரு பொன்னான காலமாக நான் நினைவில் கொள்கின்றேன். அந்தவகையில் எனக்கு கீழ் இருக்கின்ற பொலிஸ் அதிகாரிகளை பயன்படுத்தி மிக சிறப்பான சேவையை நான் செய்வேன்" என்று நம்புகின்றேன் என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்த பின்னர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் தவறான காரியங்களில் ஈடுபட்டால் அது சம்பந்தமாகவும், நற்காரியங்கள் செய்தால் அதற்கான பிரதிபலிப்புகள் கிடைப்பது இந்த சமூகத்தில் இருந்தே.

இப்போது இருக்கின்ற அரசினால், சட்டத்தை சரியாக அமுல்படுத்த வேண்டும் என எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. எனக்கு கீழ் இயங்குகின்ற அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நான் அது குறித்து அறிவித்திருக்கின்றேன்.

இதற்கு ஒரு நல்ல உதாரணம் தான் கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் அசம்பாவித நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கு எதிராக செயல்பட வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டிருக்கவில்லை.

எமது காலப்பகுதியில் மிகவும் சீர்கெட்ட ஒரு தேர்தல் யாழ்ப்பாணம் மாவட்ட பகுதியில் நடந்த வரலாறு இருக்கிறது. அப்படியில்லாமல் இந்த தடவை நடைபெற்ற தேர்தல் மிகவும் சமாதானமாக நடைபெறுவதற்கு நாங்கள் அனைவரும் ஒத்துழைத்தோம்" - என்றார். (எ-05)

# தேராவில் துயிலுமில்லத்தில் சிரமதானம்

கிளிநொச்சி, நவ. 11

மாவீரர் நாளை முன்னிட்டு கிளிநொச்சி, தேராவில் துயிலுமில்லத்தில் நேற்று சிரமதான பணிகள் முன்னேடுக்கப்பட்டன.

மண்ணுக்காக மரணித்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு அதன்பின்னர் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் இணைந்து சிரமதான பணியில் முன்னெடுத்திருந்தனர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி மாவீரர் வாரம் ஆரம்பமாகும் நிலையில் அனைத்து ஏற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றவை குறிப்பிடத்தக்கது.

# 2,500ஐ தாண்டிய தேர்தல் முறைப்பாடு

கொழும்பு, நவ. 11

2024 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,500ஐ தாண்டியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாத்திரம் 232 முறைப்பாடுகள் கிடைத்ததாக அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் தொடர்பாக பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,580 ஆக அதிகரித்துள்ளது.

வன்முறை தொடர்பான 20 முறைப்பாடுகள் அவற்றுள் அடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பெறப்பட்ட முறைப்பாடுகளில் இதுவரை 1999இற்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும், 581 முறைப்பாடுகள் தீர்க்கப்பட உள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**இடபம்**
கணவன் மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப்போன காரியங்கள் முடியும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். உடைகள் உடைபடும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்து கொள்ள வேண்டாம்.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். சகோதர வகையில் உதவிகள் உண்டு. கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைத்து விடுவீர்கள்.

**கன்னி**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள்.

**துலாம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. புது வேலை அமையும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். விருந்தினர்களின் வருகையால் வீடுகளைக் கட்டும். சூட்சுமங்களைசொல்லித் தருவார்.

**தனுசு**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். சாதாரணமாக பேசுவதை கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள்.

**கும்பம்**
எதிர்பார்த்த வேலை தாமதமாக முடியும். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம்.

**மீனம்**
சமயோஜித புத்தியால் எல்லா பிரச்னைகளையும் எளிதாக சமாளித்து வெற்றி பெறுவீர்கள். தாயாரின் உடல்நிலை சீராகும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். மதிப்பு கூடும் நாள்.

# மாமனிதர் ரவிராஜின் நினைவு தினம்





யாழ்ப்பாணம், நவ. 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மாமனிதர் ரவிராஜின் 18 ஆவது நினைவு தினம் சாவகச்சேரியிலுள்ள அவரது சிலையடியில் நேற்றுக்காலை அனுஷ்டிக்கப்பட்டது.

ரவிராஜின் மனைவி சசிகலா, ஈகச் சுடர் ஏற்றி நினைவஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ரவிராஜின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நடராஜா ரவிராஜ், 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி கொழும்பு நாரஹேன்பிட்டியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து அலுவலகத்துக்குச் செல்லும் வழியில் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். (எ- 05)

# சுன்னாகம் பொலிஸ் நிலையம் திறப்பு






யாழ்ப்பாணம், நவ. 11

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் புதிய அலுவலகமானது நேற்று முன்தினம் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸாரின் அணிவகுப்பை தொடர்ந்து புதிய பொலிஸ் நிலையம் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி புரொடெளஸ் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழாவில், பிரதம விருந்தினராக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்து சிறப்பித்ததுடன், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தனபால, யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜயசிங்க, யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசான் சூரிய பண்டார, பொலிஸ் உயர் அதிகாரிகள், சுன்னாகம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

# யாழில் கனமழை காரணமாக மூன்று குடும்பங்கள் பாதிப்பு!



யாழ்ப்பாணம், நவ. 11

கனமழை காரணமாக யாழ்ப்பாணத்தில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப் பாளர் ரி. என். சூரிய ராஜா தெரி வித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே - 401 கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே - 356 கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஐவரும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வீடு மீது மரம் முறிந்து விழுந்ததில் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், அடிப்படை கட்டமைப்பு ஒன்றும் மின்னல் தாக்கத்தால் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-05)

# மண்டபம் அகதி முகாமிலிருந்து நெடுந்தீவு வந்த 9 தமிழர்கள்!

நெடுந்தீவு, நவ. 11

தமிழகம் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்த திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த சிறுவர், சிறுமிகள் உட்பட 9 பேர் சட்டவிரோதமாக நாட்டுப்படகில் நேற்று முன் தினம் மாலை புறப்பட்டு நேற்று அதிகாலை நெடுந்தீவு அருகே கரை சேர்ந்தனர்.

இவர்கள் குறித்து தகவல் அறிந்த நெடுந்தீவு பொலிஸார் அவர்களை தனியார் ஒருவரின் வீட்டில் தங்கவைத்தனர்.

இவர்களுக்கு நெடுந்தீவு மருத்துவமனையில் முதலுதவி மற்றும் உடல் பரிசோதனை செய்யப்பட்டது.

(எ-02-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குரிமையை பயன்படுத்துக!

## மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 11

**எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதில் இருந்து விலகியிருப்பதையோ அல்லது செல்லாத வாக்களிப்பதையோ தவிர்த்து, உரிய முறையில் வாக்களிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய, வாக்காளர்களை வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர்,

வாக்கு எமது உரிமை, எமது சக்தி, எமது குரல், அது எமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கின்றது.



இந்த உரிமையை நாம் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

(அ)

# மத்திய அதிகவே நெடுஞ்சாலை 3ஆம் கட்ட பணிகள் விரைவில்!

கொழும்பு, நவ. 11

பொத்துஹெர முதல் ரம்புக்கனை வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்டப் பணிகளை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் விஜித ஹேரத் பார்வையிட்டார்.

இந்த கண்காணிப்பு விஜயத்தின்போது அமைச்சர், இந்த வீதிப் பிரிவின் தேவைகள் குறித்து அதிகாரிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அத்துடன், 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தப் பிரிவின் கட்டுமானப் பணிகளை முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

210 பில்லியன் ரூபா செலவில் கடந்த 2023 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டாது மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் 32.4 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்டுள்ளது.

(அ)

# வரி நிலுவை தொகையை செலுத்த அவகாசம் நீடிப்பு

## மதுவரித் திணைக்களத்தின் அறிவிப்பு

கொழும்பு, நவ. 11

மதுபான உற்பத்தியாளர்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மது உற்பத்தியாளர்கள் குறித்த நிலுவைத் தொகையினை எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்குள் செலுத்துமாறு இலங்கை மதுவரித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

திணைக்களத்தின் கூற்றுப்படி, சுமார் 10 நிறுவனங்கள் 8.5 பில்லியன் ரூபா வரி நிலுவைத் தொகையை செலுத்த வேண்டியுள்ளதாக அவர் கூறினார்.

இந்த காலப்பகுதிக்குள் செலுத்த வேண்டிய பணத்தை உடனடியாக செலுத்தாவிட்டால், அந்த நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயாராக இருப்பதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

# சிறீலங்கன் எயார்லைன்ஸ் பல விமான சேவைகள் இரத்து!

கொழும்பு, நவ. 11

பல விமானங்களில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இலங்கையின் உள்நாட்டு ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸின் பல விமான சேவைகள் அண்மைய நாட்களில் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் விமானத்தில் ஏற்பட் டுள்ள சிக்கல் களை சீர் செய் வதற்கு தமது குழுக்கள் நடவ டிக்கை எடுத்துள்ளதாகவும், வழக்கமான விமான பயண அட்டவணையை விரைந்து மீட்டெடுக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விமான நிறுவனம் கூறியுள்ளது.


பயணிகளின் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு இவ்வாறு விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

இதனால், பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு உணவு மற்றும் ஹோட்டல் தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறீலங்கன் ஏயர் லைன்ஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதேநேரம், வாடிக்கையாளர்களின் பொறுமைக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி கூறியுள்ள நிறுவனம், இதனால் ஏற்பட்ட இடையூறுகளுக்கு மன்னிப்பும் கோருவதாக குறிப்பிட்டுள்ளது.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையான வேட்பாளருக்கு உங்கள் வாக்குகளை இடுங்கள்!

## மயூரன் கோரிக்கை




வவுனியா, நவ. 11

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளுமையுள்ள வெற்றி பெறுகின்ற வேட்பாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் அதிகமான வேட்பாளர்கள் களம் இறங்கியுள்ளனர். எனவே எமது மக்களின்வாக்குகள் சிதறுண்டு பயனற்று போகக்கூடிய அபாயநிலமை ஏற்பட்டுள்ளது. அந்த நிலமையானது நீங்கள் விரும்பாத ஒருவரை அல்லது எமது இனத்தை சாராத ஒருவரை வெற்றி பெறவைக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கும்.

எனவே நீங்கள் வாக்களிக்கும் வேட்பாளர் ஆளுமையுள்ளவரா என்று பாருங்கள்,உங்கள் பிரச்னைகளில் பங்கெடுக்கும் ஒருவரா என்பதை சிந்தியுங்கள். தடம் மாறாத தமிழ்த்தேசிய கொள்கை உடையவரா என்று நன்கு சிந்தித்து உங்கள் வாக்கை அளியுங்கள்-என்றார். (அ)

# வவுனியாவில் யசோதினி பரப்புரை



வவுனியா, நவ. 11

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் போட்டியிடும் முன்னார் போராளியான பெண் வேட்பாளர் யசோதினி கருணாநிதி வவுனியா மற்றும் மன்னார் நகரப் பகுதிகளில் பிரசார நட வடிக்கையை மேற்கொண்டார்.

நேற்று வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் ஆரம்பமாகிய குறித்த பிரசார நடவடிக்கைகள், நகரின் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பெண் வேட்பாளர் யசோதினி கருணாநிதி மன்னார் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டார். முன்னதாக மடு ஆலயத்திற்குச் சென்று மடு பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளாரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண் டதுடன்,

பெரிய விரிச்சான் பங்குத்தந்தை ஸ்ரிபன் ராஜ் அடிகளாரையும் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து மன்னார் - சின்ன பண்டிவிரிச்சான் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டார். இதன்போது சின்ன பண்டிவிரிச்சான் புனித சவேரியார் விளையாட்டு கழக இளைஞர்களோடும் கலந்துரையாடியிருந்தார். (அ)

# இனத்தின் விடுதலைக்காக திரண்டு வாக்களிக்கவேண்டும்

வவுனியா, நவ. 11

இனத்தின் விடுதலைக்காக மக்கள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வைரவ புளியங்குளம் பகுதியில் ஆரம்பமான இந்த பிரசார நடவடிக்கைகள், நகரின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் கூட்டணியின் வேட்பாளர் செந்தில்நாதன் மயூரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், பெருமளவான தொண்டர்கள் பங்கெடுத்திருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன்-

இந்த அரசாங்கம் தங்களது சுய ரூபத்தை படிப்படியாக வெளிப்படுத்தி வருகிறது. முதலில் ஐ.நா. தீர்மானத்தை ஏற்க முடியாது என்றார்கள், 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்றார்கள், இன்று சமஷ்டிக்கு எதிராக பேசுகின்றனர் -என்றார். (அ)

# அதிகார துஸ்பிரயோகங்களுக்கு எதிராக அனுர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அங்கஜன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், நவ. 11

யாழில் நடக்கும் அதிகார துஸ்பிரயோகங்களிற்கு, அனுர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திய ஜனநாயக தேசிய கூட்டணியின் வேட்பாளர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் பொலிஸ் அதிகாரிகளால் குடும்பமொன்று தாக்குதலுக்கு உள்ளான சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

ஜனநாயக தேசிய கூட்டணியின் தேர்தல் பிரசாரமொன்று யாழ்ப்பாணம் - நாவந்துறை சென்மேரிஸ் மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக தேசிய கூட்டணியின் யாழ் தேர்தல் மாவட்ட பிரதான வேட்பாளருமான அங்கஜன் இராமநாதனை ஆதரித்து தேர்தல் பிரசாரம் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனநாயக தேசிய கூட்டணியின் யாழ் தேர்தல் மாவட்ட பிரதான வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் இவ்வாறு தெரிவித்தார். (அ)

# தந்தை வழியில் மக்களுக்கு எனது பயணம் தொடரும்!

## அனுஷா சந்திரசேகரன் தெரிவிப்பு

மலையக அரசியல் வரலாற்றில் 1994 ஆம் ஆண்டு எனது தந்தை மாற்றத்தை ஏற்படுத்தினார். உரிமை அரசியலுக்கும், அபிவிருத்திக்கும் முன்னுரிமை வழங்கினார். அதே வழியில் மக்களுக்கான எனது பயணம் தொடரும். மக்களுக்காக எனது குரல் பாராளுமன்றத்தில் நிச்சயம் ஓங்கி ஒலிக்கும் என்று ஜனநாயக ஐக்கிய குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட தலைமை வேட்பாளர் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

இராகலை ஹைபொரஸ்ட் பகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

1994 ஆம் ஆண்டு சுயேச்சையாக களமிறங்கி எனது தந்தை வெற்றி பெற்றார். அவர் மக்களின் குரலாக பாராளுமன்றத்தில் செயற்பட்டார். ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக மாறினார். மலையகத்தில் தனி வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தார்.

எனினும், எமது தலைவரான சந்திரசேகரனின் மறைவின் பின்னர், எமது மக்களுக்கான பாராளுமன்ற குரல் மௌனித்துள்ளது என்றே கூறவேண்டும். காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. எமது மக்களுக்கான அவரிடம் பல வேறு திட்டங்கள் இருந்தன. சமூகம் தொடர்பில் அவரிடம் கனவும் இருந்தது. எனவே, அந்த வெற்றிடத்தை என்னால் நிச்சயம் நிரப்ப முடியும். மலையகத்தை மாற்றத்தை நோக்கி அழைத்துச் செல்ல முடியும்.

கடந்தமுறை தனித்து வந்தேன், 17 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் கிடைக்கப் பெற்றன. அப்போது தொழிற்சங்கமில்லை, கட்சி இல்லை என்றார்கள். இன்று கட்சியில் வந்துள்ளேன், அதற்கு வேறு கதை கூறுகின்றனர். ஐக்கிய ஜனநாயகக் குரல் என்ற புதிய தேசிய கட்சியில் நான் இம்முறை போட்டியிடுகின்றேன். ஏனைய தேசிய கட்சிகள்மீது எனக்கு நம்பிக்கை இல்லை. புதிய முகங்கள் ஊடாக நிச்சயம் முன்னோக்கி செல்லலாம்- என்றார். (அ)

# கள்வர்களைத்தான் மீண்டும் நாம் தெரிவு செய்கிறோம்!

## வேட்பாளர் நிரோஸ்குமார் சுட்டிக்காட்டு

வவுனியா, நவ. 11

பிரச்னைகள் தீர்க்கப்படாத போதும் கள்வர்களையே மீண்டும் தெரிவுசெய்கிறோம். அத்துடன் தேர்தல் காலங்களில் இங்கு வருபவர்களை பார்த்தால் திருவிழாக் காலங்களில் வருகின்ற கோமாளிகள்,குரங்காட்டிகள் போல இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னிமாவட்ட வேட்பாளர் சாந்திகுமார் நிரோஸ்குமார் தெரிவித்தார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர்களுக்கு இங்கு பல பிரச்னைகள் இருக்கின்றன. தேசிய பிரச்னை, 13 ஆவது திருத்தப் பிரச்னை என பல இருக்கிறது. நானும் இங்கு பிறந்த தமிழன்தான். வன்னியை சேர்ந்தவன் தான். ஆனால் பாராளுமன்றம் சென்ற பிரதிநிதிகள் எமக்கு எதை பெற்றுத்தந்தார்கள். இன்று அடிப்படை வசதிகளே இல்லாத நிலையில் மக்கள் உள்ளனர்.

எனவே மாற்றம் ஒன்றை கொண்டுவருவதற்காக, நாம் இளைஞர்கள் முன்வந்துள்ளோம். இப்படியான பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்ற போதும் அதேகள்வர்களைத் தான் மக்கள் மீண்டும் பாராளுமன்றத்துக்கு அனுப்புகின்றனர். எனவே களவு ஊழல் கொண்ட பிரதிநிதிகளை இம்முறை நிராகரியுங்கள்-என்றார். (அ)

# சுன்னாகத்தில் பொலிஸாரினால் தாக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும்

யாழ்ப்பாணம், நவ. 11

சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் நீதி வழங்கப்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுன்னாகம் பகுதியில் சுன்னாகம் பொலிஸாரால் இளம்தாயொருவரும், அவரது பச்சிளம் குழந்தையும் கணவனும் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் சம்பவம் தொடர்பில் நான் கவலையடைவதுடன், இந்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு தாக்குதல் நடத்தியோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டி நிற்கின்றேன்.

இந்த சம்பவம் தொடர்பில் முழு அரசாங்கத்தையும் குற்றம் சாட்டுவதை காண முடிகிறது. ஒரு சில அதிகாரிகள் விடும் தவறுகளுக்கு அரசாங்கத்தை குறை கூறி பயனில்லை. இப்படியான சம்பவம் எமது பொதுஜன பெரமுன அரசாங்க காலத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. அதன் போது பிழை விடும் அதிகாரிகள் மீது சுமத்தவேண்டிய குற்றச்சாட்டுக்களை அரசாங்கத்தின் மீது சுமத்தினார்கள்.

தாக்குதல் சம்பவத்தில் குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக்கருத் தில்லை. இது தொடர்பில் உரிய விசாரணை நடத்தி நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பது எங்கள் கோரிக்கையாக இருக்கின்றது-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மின் கட்டணத்தை 30 வீதத்திற்கு மேல் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி



கொழும்பு, நவ. 11

**எதிர்வரும் காலங்களில் மின்சாரக் கட்டணத்தை 30 வீதத்திற்கு மேல் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தம்புள்ளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒன்றிலிருந்து ஒன்றரை வருட காலத்திற்குள் மின்சாரத் துறையில் பாரிய மாற்றத்தை உருவாக்குவோம், மின் கட்டணத்தை 30 சதவீதத்துக்கும் மேல் குறைப்போம். அதற்கு எங்களுக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்.

அத்துடன் எரிபொருள் விலையை குறைக்கவும் கால அவகாசம் தேவை. இவற்றை நாங்கள் செய்வோம்.

அதேநேரம், வசீம் தாஜுதீன், லசந்த விக்ரமதுங்க மற்றும் பிரதீப் எக்னெலிகொட ஆகியோரின் படுகொலைகள் மற்றும் காணாமல் போன சம்பவங்களுக்கு காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை செய்து, அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி நடத்தப்படும் அனைத்து கொலைகளின் சகாப்தத்தை நாங்கள் முடிவுக்கு கொண்டு வருவோம், ஒவ்வொரு நபர்களின் உயிரும் பெறுமதியானவை.

கடந்த காலங்களில் நிலவிய குடும்ப அரசியல், ஊழல் அரசியல் முடிவுக் கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுத் தேர்தலின் பின்னர் நாட்டை சுத்தப்படுத்துவோம்.

பொதுமக்களை அநியாயமாகக் கொலை செய்த அனைவரும் சட்டத்தின் முன்னர் நிறுத்தப்படுவார்கள், ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# இ.தொ.கா வேட்பாளர்களை ஆதரித்து ரணில் விக்கிரமசிங்க பரப்புரை

கொழும்பு, நவ. 11

பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடும் இ.தொ.கா வேட்பாளர்களை ஆதரித்து, முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கொட்டகலை சி.எல்.எப் மைதானத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு வேட்பாளர்களுக்காக பரப்புரை முன்னெடுத்தார்.

இந்த பிரசார கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்ரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், தேசிய அமைப்பாளர் ஏ. பி.சக்திவேல், பிரதி தலைவர்களான கணபதி கனகராஜ், அனுஷியா சிவராஜா நோர்வூட், கொட்டகலை, மஸ்கெலியா ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்களான ரவி குழந்தைவேல், ராஜமணி பிரசாத், திருமதி. செண்பகவள்ளி, ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் கே.கே.பியதாச உள்ளிட்ட மாவட்ட வேட்பாளர்களும் மற்றும் பெருந்திரளான ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (அ)



# பொருளாதாரச் சுமையிலிருந்து மீளும் திட்டம் தற்போதைய அரசிடம் இல்லை

## எரான் விக்கிரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11

பொருளாதாரச் சுமையிலிருந்து எவ்வாறு மீள்வது என்ற திட்டம் தற்போதைய அரசாங்கத்திடம் கிடையாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் திருடப்பட்ட பொதுச் சொத்துகளை மீளப் பெறுவதற்கான நடவடிக்கையை எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகக் கூறி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சியை கைப்பற்றினர். ஆயினும் அதனை அவர்களால் செய்ய முடியாதுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாம் வெற்றியீட்டிய பின்னர் திருடப்பட்ட பொதுச் சொத்துகளை மீளப் பெறுவதற்கான சட்டத்தை அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுவருவோம்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்.

பொருளாதாரச் சுமையிலிருந்து எவ்வாறு மீள்வது என்ற திட்டம் தற்போதைய அரசாங்கத்திடம் கிடையாது. மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். ஆதலால் எமது அனுபவங்களின் ஊடாக அதனைச் செய்வதற்கும் எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

# மலையக பெருந்தோட்ட மக்களிடம் அநுர மன்னிப்புக் கோரவேண்டும்!

## கூறுகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, நவ. 11

மலையக பெருந்தோட்ட மக்களிடம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மன்னிப்புக் கோர வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா, கொட்டகலையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தக் கூட்டம் விசேடமானது. ஏனென்றால் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் யானை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்காக நான் பிரசாரத்தில் ஈடுபடுகிறேன். ஐக்கிய தேசிய கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் இதுவாகும்.

ஐக்கிய தேசிய கட்சியின் யானை சின்னத்துக்கும் இப்பகுதி மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

முன்னாள் அமைச்சர் தொண்டமானின் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் ஒத்துழைப்புடன் பெருந்தோட்ட மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது.

பெருந்தோட்ட மக்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான நடவடிக்கையை நாம் எடுத்தபோது மக்கள் விடுதலை முன்னணியின் அப்போதைய தலைவர் ரோஹண விஜேவீர அதனை எதிர்த்தார்.

அதற்காக இந்த மக்களிடம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மன்னிப்புக் கோர வேண்டும்-என்றார். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அரசியல் தீர்வை அடைய தேர்தலை பயன்படுத்துக

## கிழக்கில் விசேட செயலமர்வு




மட்டக்களப்பு, நவ. 11

**பாராளுமன்றத் தேர்தல் அரசியல் தீர்வை வலியுறுத்தும் முக்கியத்துவம் வாய்ந்தது. அத்தோடு, தமிழ் பேசும் மக்களின் இருப்பை தக்க வைக்கும் வகையிலான பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டிய தேர்தலாகவும் உள்ளது என்பதனை வலியுறுத்தி விசேட செயலமர்வு ஒன்று நடைபெற்றது.**

மட்டக்களப்பு தன்னாமுனை மியானி மண்டபத்தில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்களை தெளிவூட்டும் வகையிலும் அது தொடர்பில் உரையாடும் வகையிலுமே இந்த செயலமர்வு நடைபெற்றது.

இச்செயலமர்வும் உரையாடலும் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் நடைபெற்றது. இதில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பிரதி இணைப்பாளர், திட்ட முகாமையாளர், திட்ட இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய ஜனாதிபதி பதவியேற்றுள்ள நிலையில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், வடக்கு - கிழக்குத் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தனித்தனியாக போட்டியிடுகின்றன.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தலா ஒவ்வொரு மாவட்டங்களிலும் 15 தொடக்கம் 25 வரையான சுயேச்சைக் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலுள்ள தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை சிதறடிக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. இந்த பிரதேச மக்களில் குறிப்பிட்டளவு வாக்காளர்கள் தேர்தலை பகிஷ்கரிக்கக் கூடிய விரக்தியான நிலையும் காணப்படுகிறது. குறிப்பாக வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இலங்கை அரச இனவாத அடக்கு முறையில் இருந்து விடுபட்டு நிம்மதியான, இயல்பான தமது அடையாளங்களுடன் வாழ்வதற்காக நிலையான அரசியல் தீர்வு தொடர்பாக இலங்கை தேசத்திலும் சர்வதேசத்திலும் குரல் கொடுக்கக் கூடிய தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றம் செல்லும் பிரதிநிதிகள் அதிகமாக குறையக் கூடிய ஆபத்தான சூழ் நிலை வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் காணப்படுகின்றது.

இந்த நிலையை கள ஆய்வின் ஊடாக கண்டுகொண்ட எமது அகம் மனிதாபிமான வள நிலையம் இந்தத் தேர்தலில் குறிப்பாக எமது வேலைக் களப் பிரதேசமான கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அனைத்து மக்களையும் வாக்களிக்க செய்வதுடன், இப்பொதுத் தேர்தலானது எமது அரசியல் தீர்வை வலியுறுத்தும் முக்கியத்துவம் வாய்ந்தது. எமது இருப்பை தக்கவைக்கும் வகையிலான பிரதிநிதிகளை தெரிவு செய்யும் தேர்தலாகவும் இருக்கின்றது. என்பதனை வலியுறுத்திய வகையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் செயலமர்வு மற்றும் உரையாடல் எனும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாக இங்கு கலந்துகொண்டவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர். (எ)



# லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

ஓட்டமாவடி, நவ. 11

ஓட்டமாவடியில் லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

ஓட்டமாவடி அக்கர் பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த நபரே உயிரிழந்தவர் ஆவார்.

இவர் தான் பணிபுரியும் ரிதிதென்ன எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது எதிரே வந்த சிறிய ரக லொறி மோதி ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இவரது சடலம் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ)



மட்டக்களப்பு, ஈழத்து திருச்செந்தூர் ஆலயத்தில் சூரன்போர் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

# தேர்தல் சட்டங்கள் குறித்து திருமலையில் செயலமர்வு



திருகோணமலை, நவ. 11

பாராளுமன்றத் தேர்தலை யொட்டி, திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு, ஒருநாள் செயலமர்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வை தேர்தல் ஆணைக்குழுவும் அரசாங்கத் தகவல் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்தன.

தேர்தல் சட்டங்கள், ஊடகத் தரங்கள், மற்றும் தேர்தல் ஒழுங்கு முறைகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு கற்பிப்பதே இந்த செயலமர்வின் முதன்மையான நோக்கமாகும்.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களில், ஊடகங்களின் பங்கு, தேர்தல் அறிக்கைகளில் ஏற்படக்கூடிய சவால்களை இனங்கண்டு, அவற்றைக் கையாள்வதற்கான தீர்வுகளை முன்வைத்தல் மற்றும் தேர்தல் காலத்தில் ஊடகவியலாளர்களின் பொறுப்புகள் மற்றும் அவற்றை நிறைவேற்றுதல் போன்ற விடயங்கள் குறித்தும் இந்தச் செயலமர்வில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது.

# பாதுகாப்பு செயலர் துய்யகொந்த அறுகம்குடாவுக்கு திடீர் பயணம்



பொத்துவில், நவ. 11

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துய்யகொந்த அம்பாறை - அறுகம்குடா பிரதேசத்துக்கு நேற்றுக்காலை திடீரென வருகை தந்தார்.

சர்வதேச ரீதியில் சிறந்து விளங்கும் சுற்றுலாத்தளமான அறுகம்குடாவின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் கண்காணிப்பதற்காக பாதுகாப்புச் செயலாளர் இங்கு வருகை தந்ததாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

# மகாவலிபுர மாணவர்களின் சமூக நல்லிணக்க பயணம்



திருகோணமலை, நவ. 11

திருகோணமலை, சூரிய புர - மகாவலிபுர வித்தியாலய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட வர்கள் தோப்பூர் பகுதிக்கு சமூக நல்லிணக்க பயணத்தை மேற்கொண்டனர்.

இதன்போது தோப்பூர் மஸ்ஜிதுல் பலாஹ் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு வருகை தந்தவர்கள் பள்ளி வாசல் நிர்வாகத்தால் வரவேற்கப்பட்டனர். இதன் பின்னர் பள்ளிவாச லில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பாகவும், இஸ்லாமிய கடமைகள் தொடர்பாக கேட்டறிந்து விளக்கங்களை பெற்றுக் கொண்டனர்.

பள்ளிவாசல் நிர்வாகத்தினர், மௌலவிமார்கள், இரண்டாம் மொழி ஆசிரியர் எஸ். டி. ஹிஸாம் ஆகியோர் இஸ்லாமிய மார்க்கம் தொடர் பான விளக்கங்களை வழங்கினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் வெள்ளப்பெருக்கு 14 இலட்சம் பேர் பாதிப்பு!

## தெற்கு சூடான் மக்களின் நிலை அபாயகட்டத்தில்

ஜெனிவா, நவ. 12

**தெற்கு சூடானில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் 14 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டும், 3 இலட்சம் பேர் புலம் பெயர்ந்தும் உள்ளனர் என்று ஐ. நா. அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.**

ஐ. நா. அமைப்பின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், தெற்கு சூடானில் ஏற்பட்ட வெள்ளத்தால் தெற்கு சூடான் மற்றும் சூடானுக்கு உட்பட்ட அபை நிர்வாக பகுதி மற்றும் 43 பிரதேசங்களைச் சேர்ந்த 14 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில், ஜாங்லெய் மற்றும் வடக்கு பாஹர் எல் கஜல் மாகாணங்கள் 51 சதவீதம் அளவுக்கு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. 3 இலட்சத்து 79 ஆயிரம் பேர் புலம்பெயர்ந்துள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால்இ மலேரியா பாதிப்பும் அதிகரித்துள்ளது. வெள்ளத்தால், வீடுகள் சேதமடைந்துள்ளன. கால்நடைகளும், பயிர்களும் பாதிப்படைந்துள்ளன. பருவநிலை மாற்றம் விளைவாக தெற்கு சூடானில் கடந்த சில ஆண்டுகளாக நிலைமை மோசமடைந்துள்ளது. 2021ஆம் ஆண்டில் யுனிசெப் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், ஒவ்வோர் ஆண்டும் வெள்ள பாதிப்புக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் முதல் 10 இலட்சம் வரை மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

# காலிஸ்தான் ஆதரவாளர்கள் சீக்கிய பிரதிநிதிகள் அல்லர்

## கனடா பிரதமர் ஜஸ்டின் தெரிவிப்பு



ஒட்டாவா, நவ. 11


கனடாவிலுள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் ஒட்டுமொத்த சீக்கிய சமூகத்தின் பிரதிநிதிகள் அல்லர் என்று அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

கனடாவைச் சேர்ந்த காலிஸ்தான் அமைப்பின் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு தொடர்பு உள்ளதாக அந்த நாட்டு அரசு குற்றஞ்சாட்டி வருகிறது. இந்த விவகாரம் தொடர்பில் இரு நாடுகளும் கடந்த மாதம் பரஸ்பரம் தூதரக அதிகாரிகளை வெளியேற்றின. இந்த விவகாரத்தால் இந்தியா - கனடா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் பலர் இருப்பதை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒப்புக்கொண்டுள் ளார். அதேவேளை, அவர்கள் ஒட்டுமொத்த சீக்கிய சமூகத்தின் பிரதிநிதிகள் அல்லர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்தோடு, கனடாவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் உள்ளனர். அவர்களை கனடாவில் உள்ள அனைத்து இந்து மக்களின் பிரதிநிதிகளாக கருத முடியாது என்றும் ஜஸ்டின் கூறினார். (எ)

# வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் - பைடன் சந்திப்பு



வாஷிங்டன், நவ. 11


அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக ஜனவரி மாதம் 20ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கிறார்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நாளை மறுதினம் 13ஆம் திகதி ட்ரம்ப் வெள்ளை மாளிகை செல்கிறார். அங்கு ஜனாதிபதியின் ஓவல் அலுவலகத்தில் ட்ரம்ப் - ஜோ பைடன் இருவரும் சந்தித்து பேசுகின்றனர். இந்த தகவலை வெள்ளை மாளிகை வெளியிட்டது. அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் வெற்றி பெற்ற பிறகு ஜோ பைடனை சந்திப்பது இது முதல் முறையாகும்.

தேர்தலுக்குப் பிறகு, பதவியில் இருந்து விலகும் ஜனாதிபதி மற்றும் பதவிக்கு வரவிருக்கும் ஜனாதிபதிக்கு இடையேயான இத்தகைய சந்திப்பு அமெரிக்காவில் வழக்கமாகவுள்ளது. (எ)

# ட்ரம்ப் வீட்டை பாதுகாக்கும் ரோபோ நாய்



வாஷிங்டன், நவ. 11

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அவருக்கான பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அவருடைய மார் எ லாகோ வீட்டில் ரோபோ நாய் கண்காணிப்பில் இறங்கியுள்ள நிலையில், இது தொடர்பான வீடியோ இணையத்தில் வேகமாக பரவி வருகிறது. (எ)

# லெபனானில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

## 12 பேர் உயிரிழந்தனர்

பெய்ரூட், நவ. 11

கிழக்கு மற்றும் தெற்கு லெபனானில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். குறிப்பாக, லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தொடர்ந்து ரொக்கெட் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் லெபனானில் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், கிழக்கு மற்றும் தெற்கு லெபனானிலுள்ள நகரங்களின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்ததாகவும், 10 பேர் படுகாயமடைந்ததாகவும் அந்த நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. (எ)



# லிபியாவில் குடியிருப்பு கட்டடம் இடிந்து விபத்து

## புலம்பெயர்ந்தோர் 7 பேர் பலி

திரிபோலி, நவ. 11

லிபியாவில் கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் சிக்கி 7 புலம்பெயர்ந்தோர் உயிரிழந்தனர்.

லிபிய தலைநகர் திரிபோலிக்கு மேற்கேயுள்ள ஜான்சூர் மாவட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கியிருந்து பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பு கட்டடத்தில் தங்கியிருந்து வந்தனர்.

நேற்று அதிகாலை அவர்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது



எதிர்பாராதவிதமாக கட்டடம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். அவர்கள் ஆபிரிக்காவை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. (எ)

# விரைவு வீசா திட்டத்தை நிறுத்தியது கனடா அரசு

ஒட்டாவா, நவ. 11

சர்வதேச மாணவர்களுக்கான விரைவு வீசா திட்டத்தை கனடா அரசாங்கம் நிறுத்தியுள்ளது.

சர்வதேச மாணவர்களுக்கு விரைவில் வீசா வழங்கும் நடைமுறையை கனடா கடந்த 2018ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இதன் மூலம் இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ் உட்பட 14 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் எளிதாக வீசா பெற்று கனடாவில் படிக்கச் சென்றனர். கடந்த ஆண்டில் 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கனடா வீசா வழங்கியிருந்தது. இந்திய மாணவர்களுக்கு 2 மாதங்களுக்குள் வீசா கிடைத்தது. தற்போதை நிலவரப்படி 4 இலட்சத்து 27 ஆயிரத்துக்கும் அதிகமான இந்திய மாணவர்கள் கனடாவில் கல்வி கற்கின்றனர்.

இந்த நிலையில் இந்தியா உள்ளிட்ட 14 நாடுகளை சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கி வந்த விரைவு வீசா நடைமுறையை கனடா அரசு நிறுத்தியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அசத்தல் வெற்றி



தம்புள்ளை, நவ. 11

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் ரி - 20 போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது.

தம்புள்ளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை அணியின் தலைவர் சரித் அசலங்க பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றி பெறச் செய்தார்.

இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி அந்த அணி 19. 3 ஓவர்களில் 135 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணி சார்பில் பிரேஸ்வெல் மற்றும் ஸக்காரி ஆகியோர் தலா 27 ஓட்டங்கள் எடுத்தனர். இலங்கை அணியின் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது.

தொடர்ந்து 136 ஓட்டங்கள் என்ற இலக்கை இலங்கை அணி விரட்டியது. அசலங்க மற்றும் ஹசரங்க இணைந்து 38 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். இது இலங்கை அணியின் வெற்றிக்கு உதவியது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த அசலங்க 28 பந்துகளில் 35 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த நிலையில், 19 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 140 ஓட்டங்கள் எடுத்து இலங்கை அணி வெற்றி பெற்றது. (எ)

## குசல் பெரேரா சாதனை



தம்புள்ளை, நவ. 11

நியூசிலாந்துக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் குசல் பெரேரா 23 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் ரி - 20 கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்த இலங்கை வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் குசல் பெரேரா இதுவரை 1904 ஓட்டங்கள் அடித்துள்ளார்.

இலங்கை அணி சார்பில் திலகரத்ன டில்ஷான் - 1889 ஓட்டங்கள், குசல் மெண்டிஸ் - 1840 ஓட்டங்கள் எடுத்துள்ளனர். (எ)

## அல்ஸாரி ஜோசப்புக்கு 2 போட்டிகளுக்கு தடை



பார்படொஸ், நவ. 11

இங்கிலாந்துக்கு எதிராக பார்படொஸ் மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவதும் கடைசியுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தொழில்முறை வீரருக்கான நெறிமுறையை மீறியமைக்காக மேற்கு இந்திய தீவுகள் அணி வீரர் அல்ஸாரி ஜோசப் 2 போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

களத்தடுப்பில் வீரர்கள் நிறுத்தப்பட்ட நிலைகள் தொடர்பில் அணித் தலைவர் ஷாய் ஹோப்புடன் ஏற்பட்ட உடன்பாடின்மை காரணமாக போட்டியின் 4ஆவது ஓவர் முடிவில் அல்ஸாரி ஜோசப் களத்தை விட்டு வெளியேறினார்.

அல்ஸாரி ஜோசப் வெளியேறியதால் மேற்கு இந்திய தீவுகள் அணியினர் ஒரு ஓவர் முழுவதும் 10 வீரர்களுடன் விளையாட நேரிட்டது.

எவ்வாறாயினும் மீண்டும் களத்தடுப்பில் ஈடுபட்ட அல்ஸாரி ஜோசப், மிக முக்கிய 2 விக்கெட்களை வீழ்த்த, இத் தொடரை 2 - 1 என்ற ஆட்டக்கணக்கில் மேற்கு இந்திய தீவுகள் அணி கைப்பற்றியது.

இது இவ்வாறிருக்க, அல்ஸாரி ஜோசப்புக்கு விதிக்கப்பட்ட இரண்டு போட்டித் தடையை உறுதிசெய்யும் வகையில் மேற்கு இந்திய திவுகள் கிரிக்கெட் நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (எ)

### சஞ்சு சாம்சன் சரவெடி

# 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது இந்திய அணி

டர்பன், நவ. 11

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றிபெற்றது.


சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இளம் வீரர்களை கொண்ட இந்திய கிரிக்கெட் அணி 4 ஆட்டங்கள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதன் முதல் ஆட்டம் டர்பன் நகரில் நடைபெற்றது.

இதில் இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக அபிஷேக் சர்மா - சஞ்சு சாம்சன் களமிறங்கினர். இதில் 4ஆவது ஓவரில் அபிஷேக் சர்மா 7 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் 21 ஓட்டங்கள் வரை தாக்குப்பிடித்தார். பாட்ரிக் வீசிய 9ஆவது ஓவரில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

ஒற்றை ஆளாக நின்று சிக்ஸர்களையும், பௌண்ட்ரிகளையும் விளாசி ஓட்டங்களை குவித்துக் கொண்டிருந்தார் சஞ்சு சாம்சன். 27 பந்துகளில் அரைச்சதம் கடந்து அசத்தினார். தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர், 47 பந்துகளில் சதமடித்து மிரட்டினார்.

இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 202 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அடுத்து 203 ஓட்டங்கள் என்ற இலக்குடன்



களமிறங்கிய தென்னாபிரிக்க அணி தொடக்கம் முதலே இந்திய அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஹெய்ன்ரிச் கிளாசன் 25 ஓட்டங்களும், மார்கோ ஜோன்சன் 23 ஓட்டங்கள் எடுத்தனர். வருண் சக்கர வர்த்தி, ரவி பிஷ்னோய் இருவரும் தலா 3 விக்கெட்கள் எடுத்தனர். அடுத்தடுத்து விக்கெட்களை இழந்த தென் னாபிரிக்க அணி 17. 5 ஆவது ஓவரில் 141 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து தோல்வியடைந்தது. (எ)

## டெஸ்டில் பங்கேற்கும் ஆஸி அணி அறிவிப்பு

மெல்பேர்ண், நவ. 11

இந்திய கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பேர்த்தில் எதிர்வரும் 22ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில், அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பட் கம்மின்ஸ் (அணித் தலைவர்), ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் ஹரி, ஜோஷ் ஹேசில்வுட், ட்ராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஷ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுசேன், நாதன் லியோன், மிட்ச் மார்ஷ், நாதன் மெக்ஸ்வீனி, ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்ரார்க் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். (எ)

# ஹரிஸ் ரவூப் அபார பந்துவீச்சு ஆஸியை வீழ்த்திய பாகிஸ்தான்

அடிலெய்ட், நவ. 11

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஹரிஸ் ரவூப்பின் அபாரமான பந்து வீச்சு மற்றும் சயீம் அயூப்பின் சிறப்பான துடுப்பாட்டம் ஆகியவற்றால் பாகிஸ்தான் அணி 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அடிலெய்ட் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 35 ஓவர்களில் 163 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ஸ்டீவ் ஸ்மித் 48 பந்துகளில், ஒரு சிக்ஸர், 5 பௌண்ட்ரிகளுடன் 35 ஓட்டங்கள் சேர்த்தார்.

மத்தியூ ஷார்ட் 19, ஜோஷ் இங்லிஷ் 18, அடம் ஸம்பா 18, கிளென் மேக்ஸ்வெல் 16, ஆரோன் ஹார்டி 14, ஜேக் ஃப்ரேசர்-மெக்கர்க் 13, மார்னஷ் லபுஷேன் 6 ஓட்டங்களில் நடையை கட்டினர். பாகிஸ்தான் அணி தரப்பில் ஹரிஸ் ரவூப் 8 ஓவர்கள் வீசி 29 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தினார். ஷகின் ஷா அப்ரிடி 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

164 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 26. 3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 169 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. அவுஸ்திரேலிய மண்ணில் 2017ஆம் ஆண்டுக்கு பின்னர் பாகிஸ்தான் அணி பெற்ற முதல் வெற்றியாக இது அமைந்தது. தொடக்க வீரரான சயீம் அயூப் 71 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 82 ஓட்டங்கள் விளாசிய நிலையில் அடம் ஸம்பா பந்தில் ஆட்டமிழந்தார்.

மற்றொரு தொடக்க வீரரான அப்துல்லா ஷபிக் 69 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 64 ஓட்டங்களும், பாபர் அஸாம் 15 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகனாக ஹரிஸ் ரவூப் தெரிவு செய்யப்பட்டார்.

9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரை 1 - 1 என சமநிலை அடையச் செய்துள்ளது. மெல்பேர்னில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

சக்தியின் வேட்பாளர்களை ஆத ரித்து இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு சீனா பல வழிகளிலும் உதவி செய்து வருகிறது.

அந்த வகையில் இலங்கை முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் வருடம் 2025 ஆம் ஆண்டு சீருடை துணி வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்-என்றார். (அ-05)

## மின்கட்டண...

தரவுகளை பகுப்பாய்வு செய்து மேலதிக கணக்கீடுகளை மேற்கொள்ளவுள்ளதால் கால அவகாசம் கோரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

புதிய யோசனையை கடந்த 8ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபைக்கு அறிவித்திருந்தது.

இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவில் கட்டணத் திருத்த விலைச் சூத்திரத்தின் கீழ் இணங்குவதில் காணப்பட்ட சிக்கல்களால் புதிய யோசனை கோரப்பட்டிருந்தது. (அ)

## அரசியல்...

இந்த தேர்தலுக்கு அவர் இங்கு வருவாரா? வரவில்லை ஏன்? அவர்கள் அவர்களது வெற்றிக்காக மாத்திரமே தேர்தலில் நின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் வன்னியில் எமக்கு வீழ்ந்த 21 ஆயிரம் வாக்குகளும் எமது வெற்றிக்கு பாரிய ஒரு பங்களிப்பையும் சக்தியையும் வழங்கியிருந்தது.

வடக்கு மக்களுக்கு சொந்தமான காணிகள் பாதுகாப்பு காரணங்களுக்காக அரசாங்கத்திடம் இருக்கிறது. அந்தக் காணிகள் அனைத்தையும் மீண்டும் அந்த மக்களுக்கு நாங்கள் வழங்குவோம்.

எங்களுக்குத் தெரியும். இங்கு யுத்தம் ஒன்று நடந்தது. பல்வேறு அநீதிகளுக்கு முகம்கொடுத்தோம்.

இன்று அரசியல் கைதிகள் உள்ளனர்.

அவர்களை சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கு அமைய விரைவில் விடுதலை செய்வோம் என வாக்குறுதியளிக்கிறேன்.

இது சமத்துவமான ஒற்று மையான ஆட்சி. இதனை தென்பகுதி எதிர்க்காது. ஆனால் அன்று அப்பிடி அல்ல வடக்கில் இவ்வாறு ஒன்று நடந்தால் தென் பகுதி அதற்கு எதிராக இருந்தது.

எங்களை பிரித்து அரசியல் செய்தார்கள். நாங்கள் இன்று அனைவரும் ஒன்றாக இருக்கிறோம்.

வடக்கின் மீன்வளத்தை பெரிய அளவில் வேறு நாடுகள் வந்து சூறையாடுகின்றன. எமது மீன்வளம் அழியும்வாறாக அதனை செய்கின்றனர்.

நாங்கள் அரசு என்ற வகையில் எமது மீனவர்களின் உரிமைக்காக வடக்கில் வாழும் மீனவர்களின் பாதுகாப்புக்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

சூரியஒளி இன்று மதிப்பு வாய்ந்துள்ளது. அது எமதுசக்தி. அதனை துண்டு துண்டாக விற்பதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

இந்த ஒப்பந்தங்களை எல்லாம் நாங்கள் மீளாய்வு செய்ய வேண்டும்.

இந்த வளங்களை நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்திற்காக பயன்படுத்த வேண்டும்.

கேரளக் கஞ்சா, உட்பட போதைப் பொருள் பிரச்னை இங்கு இங்கு இருக்கிறது. அவற்றை தடுக்க வேண்டும்.

எனவே புதிய ஒரு நிலைக்கு இந்த நாட்டை அழைத்துச் செல்லவேண்டும்.

அத்துடன் எமது முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு நிச்சயம் இருக்கும் - என்றார். (அ)

## முட்டை விலை...

தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக கொட்டகலையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தில் உள்ள திருடர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுக்க நாங்கள் பிரேரணையினை கொண்டு வந்த போது தேசிய மக்கள் சக்தியினர் எதிராக வாக்களித்தனர்.

அந்த நேரம் திருடர்களை பிடிக்க அவர்களுக்கு விருப்பம் இல்லை. தற்போது திருடர்களை பிடிப்பதாக சத்தமிட்டு வேலையில்லை.

ஒரு மாதத்திற்குள் நாட்டு மக்கள் நல்ல பெறுபேறுகளை பெற்றுள்ளனர். இன்னும் சிலமாதங்கள் கடந்தால் என்ன நடக்கும். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாங்கள் சம்பளத்தை அதிகரித்தோம். அவர்கள் இரண்டாயிரம் ரூபாவாக அதிகரிப்பதாக கூறுகிறார்கள்.

வீடமைப்பு பிரச்னை கானப்பட்டது. அதனை ஜீவன் தொண்டமானினால் தீர்க்க முடிந்தது. லயன் முறையினை கிராமங்களாக மாற்ற நடவடிக்கை எடுத்தோம்.

இது போன்ற பிரச்சினைகளுக்கு நாங்கள் தான் தீர்வினை பெற்றுக் கொடுத்தோம்.

இவ்வாறு நாங்கள் செய்த போது தேசிய மக்கள் சக்தியினர் என்ன செய்தனர். ஐக்கிய மக்கள் சக்தியினர் எதனை செய்தனர். அவர்களும் எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

எமது அரசாங்கத்தில் அஸ்வெசும வழங்கினோம். அரச உத்தியோகத்தர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கினோம். தேசிய மக்கள் சக்தியினர் இருபதாயிரம் தருவதாக கூறினார்கள்.

அடுத்த பாராளுமன்றத்தில் எமது கட்சியினை சார்ந்தவர்கள் தான் சட்டத்தை அமுல்படுத்தி அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்தை அதிகரிப்பார்கள் - என்றார். (அ)

## பொலிஸ்மா...

நேற்று நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொலிஸாரின் செயல்பாடுகளை காணொளி பதிவு செய்து சமூக ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தினால் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என சுற்றறிக்கை வெளியிட்டு இருந்தார்.

இது இவ்வாறு இருக்கையில் நேற்றைய தினம் பதில் பொலிஸ் மா அதிபர் சுன்னாகத்திற்கு வருகை தந்து புதிய பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்து விட்டு சென்று சில மணி நேரத்தில், அவரது சுற்றறிக்கையை மீறி அராஜகம் இடம்பெற்றுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் பெயர் எழுதப்பட்ட முச்சக்கர வண்டியில் வந்த பொலிஸாரினால் தாக்குதல் நடத்தப்பட்டவேளை, அந்த தாக்குதலை காணொளி பதிவு செய்த ஆசிரியரின் கைப்பேசியை பொலிஸார் பறித்து சென்றனர்.

பதில் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அவர் இவ்வாறு காணொளி பதிவு செய்துள்ளார். இது இவ்வாறு இருக்கையிலேயே பொலிஸாரின் அராஜகம் இடம் பெற்றுள்ளது.. இதுவரை அந்த கைப்பேசி கொடுக்கப்படவுமில்லை.

இந்தப் பிரச்னைக்கு நீதி வழங்கப்பட வேண்டும். ஆசிரியரது கைப்பேசி கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் இந்த சம்பவத்தை மேற்கொண்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ)

# “மக்களை ஏமாற்றும் நபர்களுக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும்!”

கொழும்பு, நவ. 11

பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றும் நபர்களுக்கு மக்கள் பாடம் புகட்ட தயாராக வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர், பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மத்தேகொடவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாகரிகமாக அரசியல் செய்யாத பலர் பொய்களைக் கூறி நாட்டு மக்களை நகைச்சுவைக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

ஒரு நாடு மாற வேண்டுமாக இருந்தால் குடிமக்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் அதனை நிறைவேற்றினீர்கள்.

நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை பார்க்கும்போது நமக்காக உழைக்க ஓர் அண்ணன் இருக்கிறார் என்ற உணர்வு ஏற்படுகிறது.

அவரது கரங்களைப் பலப்படுத்துவதற்காக நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய சிறந்த நபர்களை நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்ய வேண்டும்-என்றார்.

## அனைத்துலக...

மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

நாடாளுமன்ற தேர்தல் முடிந்தவுடன் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. ஓய்வு எடுக்க வெளிநாடு செல்வதாக அவர் கூறியிருந்தாலும், அனைத்துலக அமைப்பில் பதவி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதாக சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

## தேர்தல்...

இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போது அவர் இது குறித்து விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் அனைத்தும் இன்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வருகின்றன. ஊடகங்கள் வாயிலாக கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு தேர்தல் தினம் வரை மௌன காலமாகும்.

மேலும், தேர்தல் பிரசாரத்துக்காக அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்களை அகற்றிக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம். அதேபோன்று வேட்பாளர்களின் இல்லங்களில் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தால் அவற்றையும் அகற்ற வேண்டும். அல்லது தேர்தல் சட்டத்துக்கு அமைய அவை அனைத்தும் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வாக்காளர்கள் தமது வாக்கை பயன்படுத்துவதற்காக உரிய வகையில் விடுமுறையை பெற்றுக்கொடுக்குமாறு அரச மற்றும் தனியார் துறையினரிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். தேர்தலை நியாயமாகவும் சுமுகமாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆகையால் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (அ)

## அடுத்த...

பொருளாதார கொள்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது, இலங்கையின் பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தின் கீழான அண்மைக்கால முன்னேற்றங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் அண்மையில் வொஷிங்டனில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் நாணய நிதியத்தின் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுனர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## சுன்னாகத்தில்...

சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் வான் - மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதனை தொடர்ந்து வாகன சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை சிவில் உடையில் நின்ற பொலிஸார் பரிசோதிக்க முற்பட்ட வேளை சாரதிக்கு பொலிஸாருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டது.

அதனை தடுக்கச் சென்ற சாரதியின் மனைவியையும் பொலிஸார் தாக்கியதாகவும் , அவரின் கையில் இருந்த அவர்களின் இரண்டு மாத குழந்தையை பொலிஸார் தட்டி விட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தினை அடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையம் முன்பாக மக்கள் கூடியமையால் பதட்டமான சூழ்நிலை காணப்பட்டது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம் ஜருள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் பயணித்த மோட்டார் சைக்கிளும் வான் ஒன்றும் காங்கேசன் துறை வீதியில் சுன்னாகம் சந்திக்கு அருகில் விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தினையடுத்து, வாகனம் அவ்விடத்தில் இருந்து தப்பிச்செல்ல முற்பட்டவேளை, சிவில் உடையில் நின்ற பொலிஸார் வாகனத்தை வழிமறித்து சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை கேட்டுள்ளனர்.

சிவில் உடையில் உள்ளவர்களுக்கு தான் சாரதி அனுமதிப் பத்திரத்தினை தரமாட்டேன் எனக் கூறி தர்க்கம் செய்த நிலையில் இரு தரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரும் கைகலப்பில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் தெல்லிப்பழை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்கவின் உத்தரவில், விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளில் குற்றவியல் குற்றங்கள் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

பொலிஸார் பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே கடமையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு என ஒரு வரையறை இருக்கிறது. அதை அவர்கள் மீற முடியாது. மீறினால் நிச்சயமாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். சுன்னாகத்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசேட குழுவின ரால் பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

சம்பவம் தொடர்பில் பூரண விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ் மாஅதிபரும் அறிவுறுத்தியுள்ளார்.

நிச்சயமாக பக்கச் சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 11

அம்பலாங்கொடை, உரவத்தை பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மோட்டார் சைக்களில் வந்த அடையாளம் தெரியாத இருவர், மற்றொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆண் மற்றும் பெண் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பல்கலைகளுக்கு விசேட விடுமுறை!

கொழும்பு, நவ. 11

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை கருத்திற் கொண்டு, நாடு முழுவதும் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் நவம்பர் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக அரச பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விடுமுறை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மேலும், அரசுப் பல்கலைக் கழகங்களின் கீழ் இல்லாத தனியார் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் வாக்களிப்பதற்காக விடுமுறை அளிக்க வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பிறந்த 18 வயது பூர்த்தியானவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக பாராளுமன்றத் தேர்தலை கருத்திற் கொண்டு நவம்பர் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)
















இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ... பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 11.11.2024 திங்கட்கிழமை | இதழ் : 315 | பக்கங்கள் : IV +12

# தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமையே எமது இனத்துக்கு பலம் சேர்க்கும்!

## இதுவரை 5 கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டமைப்பு

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி


## தமிழர் தேசத்தின் ஒற்றுமையை விரும்பும் எமது மக்களின் தெரிவாக சங்கு இருக்கட்டும்!


**தமிழ் மக்களின் விருப்பறிந்து எதிர்காலத்தில் அனைவரும் ஓரணியில் திரள இது வழிவகுக்கட்டும்!**

**தமிழ்த் தேசிய அரசியலின் ஒற்றுமையை சிதைத்த கட்சியை இந்தத் தேர்தலில் நிராகரிப்போம்!**

**அதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களும் ஒற்றுமைப்பட வழிவகுப்போம்!**

## தமிழ்த் தேசிய சின்னம்





**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி (DTNA)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## தேர்தல் விஞ்ஞாபனம்

ஜனநாயகதமிழ்தேசியகூட்டணி என்பது தமிழ் ஈழவிடுதலைஇயக்கம் (TELO), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய போராட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து பயணிக்கும் ஓர் அரசியல் கூட்டமைப்பாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் பெயரில், பல தமிழ் அமைப்பினரும் ஒன்றிணைந்து பலமான அரசியல் கட்டமைப்பாக, கடந்த 2001ஆம்ஆண்டிலிருந்து பயணித்து வந்தோம். ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பலமான ஜனநாயக கட்டமைப்புகளுடனான அரசியல் கட்சியாக உருவாக்குவதில் ஏற்பட்ட திட்டமிட்ட தடைகள் காரணமாகவும், கூட்டமைப்புக்குள் காணப்பட்ட எதேச் சதிகாரப் போக்குகள் காரணமாகவும் தமிழரசுக் கட்சியின் தவறான கொள்கை காரணமாகவும் வெவ்வேறு காலகட்டங்களில் சில கட்சிகள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தன.

இறுதியாக, 2023இல் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசுக்கட்சி தனது வீட்டு சின்னத்தில் தனித்து போட்டியிடுவதாக தீர்மானித்து, அறிவித்ததோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது.

பல்லாயிரக்கணக்கான தியாகங்களின் ஊடாக கட்டியெழுப்பப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் இயக்கமும், முக்காலத்திற்குமான தமிழ் மக்களின் உச்சபட்ச எதிர்பார்ப்பாகவுள்ள ஒற்றுமையும் ஒன்றுசேர சிதைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது எனும் உறுதியான தீர்மானத்தின் அடிப்படையில், தமிழ் தேசியப் பரப்பில் இயங்கிக்கொண்டிருக்கும் மேற்கண்ட கட்சிகள் இணைந்து கூட்டமைப்பாக பயணிப்பது எனவும் தீர்மானித்தோம். அக்கூட்டணிக்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்று பெயரிடப்பட்டது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளும், தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற பெயரில் உருவாக்கப்பட்ட சிவில் அமைப்புகளின் கூட்டும் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பாக செயற்பட்டது. அந்த பொதுக்கட்டமைப்பானது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டோம்.

மிகக் குறுகிய கால அவகாசத்தில் தமிழ் மக்கள் தமது விருப்பு வாக்குகளைப் பதிவு செய்து தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கைகளையும், அதற்கு அவசியமான ஒற்றுமையையும் சங்கு சின்னத்தின் ஊடாக உலகறியச் செய்தனர். இதனைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் சங்கு சின்னத்தில் தொடர்ந்து பயணிப்பதாக முடிவு செய்தோம்.

இன்று, தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு பிரதேசங்களில், தமிழர் தரப்பில் உள்ள ஒரே ஒரு கூட்டணியான ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, சங்கு சின்னத்தில் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்களின் ஒற்றைப் பிரதிநிதித்துவத்தையாவது பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையில், நாம் முழுமையான அர்ப்பணிப்புடன் தமிழரசுக்கட்சியுடன் பேச்சுக்களை நடாத்தினோம். திருகோணமலையில் வீட்டுச் சின்னத்திலும், அம்பாறையில் சங்குச் சின்னத்திலும் ஒற்றுமையாக வேட்பாளர்களை நிறுத்துவதற்கு தமிழரசுக் கட்சியின் தலைமை உறுப்பினர்கள் தமது இணக்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர். அதற்கிணங்க, திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து வேட்புமனுவை தாக்கல் செய்ய முடிந்தது. ஆனால் தமிழரசுக் கட்சியானது தனது சுயநலமான போக்கின் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட முடிவு செய்தது. இதன் காரணமாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் தனித்துப் போட்டியிட நிர்ப்பந்திக்கப்பட்டது.

தென்னிலங்கையில் தமிழர்கள் அதிகமாக வாழும் கொழும்பு மாவட்டத்தில், எமது கூட்டணியில் இணைந்து போட்டியிட பலர் விருப்பம் தெரிவித்திருந்த போதிலும் அங்கு போட்டியிடுவதை நாம் தவிர்த்திருந்தோம். யுத்த காலங்களில் மட்டுமல்லாது அதற்குப் பின்னரும் எமது மக்களின் அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினைகளில் நாடாளுமன்றிலும் அதற்கு வெளியேயும் எம்மோடு தோளோடு தோள் நின்று குரல் கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகளை பலவீனப்படுத்துகின்ற எத்தகைய செயற்பாடுகளிலும் நாம் ஈடுபடலாகாது எனும் தெளிவான, உறுதியான சிந்தனையின் அடிப்படையில் செயற்பட்டிருந்தோம்.

தமிழ்த் தேசிய இனமானது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக பல்வேறு வழிமுறைகளில் தனது விடுதலைக்காகப் போராடி வருகிறது. தமிழர்களாகிய நாம் இலங்கைத்தீவில் தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனமாக வாழ்ந்து வருகிறோம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பல ஆயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட, மரபுவழியான வாழ்விடத்தை தாயகமாகக் கொண்ட, தனித்துவமிக்க பண்பாட்டைக் கொண்ட ஒரு தேசமாக வாழுகின்றோம்.

ஆனாலும், இலங்கைத் தீவானது பல இன, பல மத, பல மொழி, கலாசாரங்களைக் கொண்ட ஒரு தீவு என்பதை உணர்ந்து இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவே தேசிய இனப்பிரச்சினை தோற்றம்பெறுவதற்கும் அது கூர்மை அடைவதற்கும் இறுதியில் விஸ்வரூபம் எடுப்பதற்குமான மூல காரணமாகும்.

தமிழ் மக்களுடைய இருப்பை அழிக்கும் தொடர்ச்சியான செயற்பாடுகளே இன அழிப்பு நடவடிக்கையாகும். தமிழர் தேசத்தின் இருப்பையும் தனித்துவத்தையும் அழித்து பெரும்பான்மை இனத்துடன் அதனைக் கரைக்கும் உள்நோக்கத்தோடு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது திட்டமிட்டு முன்னெடுத்த இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் போராடினார்கள். அப்போராட்டங்களை நிர்மூலமாக்கும் குறிக்கோளோடு ஏவிவிடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் மிகக்கொடிய விளைவே இறுதிப்போரில் நிகழ்ந்த உச்சமான இனஅழிப்பாகும்.

இதன் அடிப்படையிலேயே, உலகின் மிகப்பெரிய தமிழ் சட்டமன்றமாகிய தமிழக சட்டமன்றம், இலங்கைத் தீவில் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்றது இனஅழிப்பு என்ற ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றியது. எமது வடக்கு மாகாணசபையும் நடைபெற்றது இனஅழிப்பு என்று ஏகமனதான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் உள்ளூராட்சி அமைப்புகளாலும் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் மரபுரிமைச் சின்னங்கள் இருந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அவ்விடங்கள் வேகமாக சிங்கள பௌத்த மயமாக்கப்படுகின்றன. அதிகம் பாதிக்கப்பட்டுள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவில் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு 26 க்கும் அதிகமான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைப்பதன் மூலம் வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் திட்டங்கள் நடைமுறைப படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பல நீதிமன்றத் தீர்ப்புகளை மீறியே நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லையில் ஒருபுறத்தில் சிங்கள பௌத்த மயமாக்கல் வேகமாக நடந்து வருகிறது. இன்னொரு புறத்தில் நிலப்பறிப்பு தொடர்கிறது. 3000ற்கும் அதிகமான குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான கால்நடை சார்ந்த பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தோடு மயிலத்தமடு, மாதவனை போன்ற இடங்களில் உள்ள மேய்ச்சல்தரைகளை அரச அனுசரணையோடும், பாதுகாப்போடும் வெளிமாவட்ட சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். அங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன. வாகரை மற்றும் கதிரவெளிப் பிரதேசங்களில் பிரதேசமக்களின் வாழ்வாதாரத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பினையும் பாதிக்கும் கனிமவள அகழ்வுகளும் சட்ட விரோத இறால் பண்ணைகளும் மக்களின் எதிர்ப்பை மீறியே முன்னெடுக்கப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில், கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான ஒருபிரதேச செயலர் பிரிவாகத் தரம் உயர்த்துமாறு அங்குள்ள தமிழ் மக்கள் நான்கு தசாப்தங்களாக தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இன்றுவரை ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. மாறாக அங்குள்ள சிறுபான்மையின மக்களை மாறிமாறி ஏமாற்றி இனப்பகைமையினை மேலும்மேலும் வளர்க்கும் கைங்கரியத்தையே செய்துவருகின்றன.

வடக்கு மாகாணத்தின் வன்னி மாவட்டங்களில் குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, நீராவியடி ஆகிய இடங்களில் தமிழ் மரபுரிமைச் சின்னங்கள் அமைந்திருக்கும் சிறுமலைகளில் அரச திணைக்களங்களும் பிக்குகளும் அரசபடையினரும் இணைந்து பௌத்த கட்டுமானங்களை உருவாக்கி வருகிறார்கள். அங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகளை உதாசீனம் செய்தே அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தீர்ப்பு வழங்கிய நீதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அவ்வாறான நிலைக்கு வெட்கப் படவேண்டிய, வருத்தப் படவேண்டிய அரசாங்கம் அவரைத் தனிப்பட்ட முறையில் சிறுமைப்படுத்தியது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கு பொதுமக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1 ஆக இன்னமும் இருக்கின்றது. சுமார் 100இற்கும் மேற்பட்ட படைமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான்குளம் என்ற தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் கிராமம் இராணுவத்தின் பாதுகாப்புடனும் அரச அனுசரணையுடனும் ஆக்கிரமிக்கப்பட்டு 'கலாபோகஸ்வேவ' என்ற பெயருடைய சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு, மிகக் குறுகிய காலத்துக்குள் 5000ற்கும் அதிகமான தென்னிலங்கை மக்கள் அழைத்துவரப்பட்டு குடியமர்த்தப்பட்டதுடன் வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பல் திட்டமிட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. குடியேற்றக் கிராமத்துக்குத் தேவையான சகல உட்கட்டுமான வசதிகளும் அரச தரப்பினரால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் கனிமவளங்கள் பறிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழலுக்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. பேசாலை, விடத்தல் தீவு, தள்ளாடி, பூநகரி பிரதேசங்களில், பொருளாதார அபிவிருத்தியின் பேரால் மக்களின் எதிர்ப்பைமீறி அனைத்தும் முன்னெடுக்கப்படுகின்றன. முள்ளிக்குளம் கிராமத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் ஸ்ரீலங்கா கடற்படையானது அக்கிராமத்தின் பூர்வகுடிகளான தமிழ்மக்களை அங்கு முழுமையாக மீளக்குடியமரவிடாமல் தடுத்துவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் விளைநிலங்களிலும், கரையோரத்திலும் படைத்தரப்பு தனது முகாம்களை அமைத்திருக்கும் பெரும்பாலான காணிகள் தனியாருக்குரியவை. இவற்றுள் மிகச்சிறிய நிலப்பரப்புத்தான் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது. யாழ்மாவட்டத்திலும் தமிழர் மரபுரிமைச் சொத்துக்கள் பல ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள பௌத்த மயமாக்கப்பட்டுள்ளன. நாவற்குழியில் அரசின் அனுசரணையோடு ஒரு சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது. சிங்கள பௌத்தர்கள் எவரும் இல்லாத தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக ஒரு புதிய விகாரை படையினரால் கட்டப்பட்டுவிட்டது.

தமிழர் தாயகப் பிரதேசத்தின், குறிப்பாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களுக்குரிய கடல்வளம் அழிக்கப் படுகின்றது. அவர்களது வாழ்வாதாரம் சிதைக்கப்படுகிறது. இந்திய இழுவைப் படகுகளாலும், உள்ளூர் இழுவை மடித்தொழிலாலும், தென்பகுதி மீனவர்களின் ஆக்கிரமிப்புகளாலும், சட்டவிரோதமான மீன்பிடிமுறைகளாலும், மீனவக் கிராமங்களில் படைத்தரப்புகள் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புகளாலும் கடல் மீதான உரிமையை இழந்தும், கடல் வளங்களை இழந்தும், தமது வாழ்வாதாரங்களை இழந்தும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் 46,000 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் தாயகமெங்கும், தமிழர்களையும் அவர்களது மண்ணையும் வளங்களையும் கூறுபோடும் வகையில், வனவளத் திணைக்களம் வனஜீவராசிகள் திணைக்களம் கனிமவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்களும், அரசின் நிர்வாகக் கட்டமைப்புக்குள் அடங்காத மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து, காடுகளின் பாதுகாப்பு, வன உயிரினங்களின் பாதுகாப்பு என்ற பெயரில் தனியார் காணிகள், பயிர்ச் செய்கை நிலங்கள், வணக்கத் தலங்கள் உள்ளடங்கிய பல்லாயிரக் கணக்கான ஏக்கர்கள் அளவு நிலங்களை அபகரித்து வைத்துள்ளன.

(III பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(II ஆம் பக்க தொடர்ச்சி)

யுத்தம் முடிவடைந்த நிலையிலும்கூட சிறைகளில் மிக நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. மாறாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதைக் காணமுடிகிறது. தமிழ் மக்களின் அரசுக்கு எதிரான செயற்பாடுகளைப் பயங்கரவாதமாகச் சித்திரிக்கக் கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும், பல்வேறுபட்ட சர்ச்சைகளுக்கு மத்தியிலும், உச்ச அளவில் பயன்படுத்தப் பட்டுவருகின்றது. யுத்தம் முடிந்ததும் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 15 ஆண்டுகளின் பின்னரும் அச்சுறுத்தல்களின் மத்தியிலேயே வாழ்ந்து வருகிறார்கள். மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், அரசியற் செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறைகளும் அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்துவருகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமாகிய கடந்த ஓகஸ்ட் முப்பதாம் திகதியன்று திருகோணமலையில் நடந்த எதிர்ப்பு பேரணியில் கலந்துகொண்ட உறவினர்கள் மற்றும் அரசியற் செயற்பாட்டாளார்கள் மீது அரச பயங்கரவாதமானது போலீஸ் நடவடிக்கை என்ற வடிவத்தில் ஏவிவிடப்பட்டது. நீதிமன்ற கட்டளையின் கீழான இச்சட்ட நடவடிக்கை மூலம் அப்பேரணி குலைக்கப்பட்டது.

இவ்வாறான நடவடிக்கைகள் யாவும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாத தன்மையைக் கொண்டவை. ஶ்ரீலங்கா அரசு என்ற மையத்திலிருந்து உள்நோக்கத்துடன் திட்டமிடப்படுகின்றவை. தொல்லியல் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஆக்கிரமிப்பைப் பகலில் சட்டரீதியாகச்செய்கின்றன. பிக்குகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் சட்டத்தையோ நீதிமன்றத்தையோ காவல்துறையையோ மதிப்பதில்லை. படையினர் இரவுகளில் பௌத்த கட்டுமாணங்களை இரகசியமாகக் நிர்மாணிக்கின்றார்கள்.

நிலப்பறிப்பு, சிங்கள பௌத்த மயமாக்கல், அரசின் அனுசரணையுடனான குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் படைத்தரப்பு முழுமையாக பயன்படுத்தப்படுகின்றது. வடக்கு கிழக்கில் மட்டும் 65,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புச் செயற்பாடுகள் தமிழர் தாயகமெங்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் தாயகத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாடுவது, இன விகிதாசாரத்தைக் குறைப்பது, நிலத்தைப் பறிப்பது, தமிழ் மரபுரிமைச் சின்னங்களை அழிப்பது, அங்கே சிங்கள பௌத்த மரபுச் சின்னங்களை ஸ்தாபிப்பது போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பின் வெவ்வேறு வடிவங்களாகவே அமைகின்றன.

சுருக்கமாக சொல்வதெனில், யுத்தம் முடிவடைந்த பின்னரான கடந்த 15 வருட காலத்தை இன நல்லிணக்கத்துக்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக, தமிழர் சமூகத்தின் இருப்பை இல்லாதொழிக்கும் நிலப்பறிப்புக்கும் சிங்கள பௌத்தமயமாக்கலுக்குமே அரசு பயன்படுத்தி வந்துள்ளதோடு, அதனை ஒவ்வொரு அரசாங்கங்களும் தமது கொள்கையாக முன்னெடுத்து வந்துள்ளன.

இனவழிப்புச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அதேவேளை, நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை மட்டும்தான் இருக்கிறது என்ற பொய்யான தோற்றத்தைக் கட்டியெழுப்பி பன்னாட்டு சமூகத்தை நம்ப வைக்க சிங்கள பௌத்த அரசாங்கங்கள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றன. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண மறுத்து இனஅழிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்த காரணத்தாலேயே நாடு வங்குரோத்தாகியது. இப்பொழுது நாட்டை பிடித்துலுப்பும் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் யுத்தத்திற்காக வாங்கிய கடன்சுமைதான் என்பதை தென்னிலங்கையும் அதனைத் தாங்கிப் பிடிக்கின்ற சர்வதேச சக்திகளும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தென்னிலங்கையின் சிங்கள அரசியல்வாதிகள் அனைவரும், பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் விளைவுதான் என்பதனை மூடிமறைக்க முயல்கின்றனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணாமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கமுடியாது என்ற ஆழமான உண்மையை எந்தவொரு அரசாங்கமும் அதன் உறுப்பினர்களும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதில்லை.

யுத்த தளபாடங்களுக்காக, முன்பிருந்த அரசாங்கங்கள் 25000 கோடி அமெரிக்க டொலர்களைச் செலவழித்துள்ளதாக இந்திய பாதுகாப்புத்துறை சார்ந்த ஒரு நிபுணரின்அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பணத்தைச் செலவழித்து முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட உயிரழிவு, பொருள் அழிவைக் குறித்து இதுவரையிலும் உத்தியோகபூர்வ மதிப்பீடு எதுவும் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை. அந்த அழிவுகளில் இருந்து தமிழ்மக்களை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு செயல்திட்டமும் இன்றுவரையிலும் உருவாக்கப்படவுமில்லை.

யுத்தத்துக்காகப் படையினரின் எண்ணிக்கை பல இலட்சங்களாக அதிகரிக்கப்பட்டது. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் நாற்பது வீதம் படையினருக்கே செலவழிக்கப்படுகிறது. இலங்கைத் தீவின் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மொத்தச் சம்பளத்தில் ஏறக்குறையச் சரிபாதியளவு படையினருக்கான சம்பளமாக வழங்கப்படுகிறது. கடந்த 15 ஆண்டுகளிலும் படைத்தரப்பின் ஆட்தொகை குறிப்பிடத் தக்களவு குறைக்கப்படவில்லை. அதாவது இராணுவமய நீக்கம் நிகழவில்லை. மாறாக, தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்தமயப்படுத்தும் நிகழ்ச்சிநிரலை நிறைவேற்றுவதற்காக படைத்தரப்பு பெருஞ்செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான இராணுவப் பொருளாதாரச் சூழலுக்குள் புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலீடு செய்யத் தலைப்படமாட்டார்கள். தற்போதைய காலங்களிலும் அதிகரித்த அளவில் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வருகிறார்கள். தற்போது புலம்பெயர்பவர்கள் படித்தவர்கள், சமூகத்தில் பொறுப்பான பதவிகளை வகிப்பவர்களாவர். இவ்வாறாக தலைமை தாங்கும் தகைமையுள்ள படித்தவர்கள் சமூகத்தில் இருந்து வெளியேறுவது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் வாழ்வியலில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இப்பொழுது புதிதாகப் பதவியேற்றுள்ள ஜனாதிபதி அனுரகுமார திஸ்ஸநாயக அவர்களும் தேசிய மக்கள் சக்தி என்ற அவரது கட்சியும் இலங்கையில் ஊழலும் பொருளாதாரப் பிரச்சினை மாத்திரம்தான் இருக்கிறது வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லை என்ற பொய்யான பிம்பத்தைக் காட்டவே முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் கூட்டுணர்வையும் நம்பிக்கையையும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். அதேசமயம் இனப் பிரச்சினைக்கான தீர்வின் அவசியத்தையும் அவசரத்தையும் தென்னிலங்கைக்கும் உலக சமூகத்துக்கும் நிராகரிக்கப்பட முடியாத விதத்தில் உணர்த்த வேண்டியதும் அவசியமாகும்.

தமிழ் மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள் மட்டும்தான் உண்டு என்று ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் தொடர்ச்சியாக கூறிவரும் ஒருபின்னணியில், தேசிய இனப் பிரச்சினையைப் பேசுபொருளாக்கி அதன்மீது தென்னிலங்கையின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் நோக்கத்தோடு, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினராகிய நாம் ஒற்றுமையுடன், எம்மக்களின் இன நலன்களைப் பேணும் நோக்குடன், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு தாயகம் எங்கும் தகுதியான வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளோம்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களில் ஒருபிரிவினர் ஏதாவது ஒரு தென்னிலங்கை கட்சியின் தமிழ் வேட்பாளருக்கு அல்லது சகோதர இனவேட்பாளருக்கு வாக்களித்து வந்திருக்கிறார்கள். இவர்களில் வென்றவர்களும்சரி தோற்றவர்களும்சரி இன்றுவரையிலும் இனப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஒருதீர்வைத் தாம் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் ஊடாக தரவும் இல்லை. இன அழிப்புச் செயற்பாடுகளை நிறுத்தவுமில்லை.

எமது கூட்டணியில், நாம் தமிழ் மக்களை ஓரணியாகத் திரட்டுவோம். அதேசமயம், இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய தமிழ் மக்களின் உறுதியான கோரிக்கையை சர்வதேச சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவோம். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியையும் கோருவோம்.

இந்த அடிப்படையில், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி இனப் பிரச்சனைக்கான நிரந்தரதீர்வானது பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்கவேண்டும் என்று உறுதியாக வலியுறுத்துகின்றது.

01) இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு உருவாக்க வேண்டிய இலங்கைத் தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

02) தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே புதிய யாப்பானது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில், அதாவது புதிய யாப்பானது இலங்கைத்தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் (Plurinational State) கட்டமைக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும்.

03) தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்களை ஒன்றிணைத்ததாக அமையவேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் வாழும் முஸ்லீம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சுவார்த்தை நடாத்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எப்போதும் தயாராக உள்ளது.

04) மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படவேண்டும். மேலும் உடனடி பிரச்சினைகளுக்கும் அவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்துவரும் கோரிக்கைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்படவேண்டும். இத்தீர்வுகளுக்கான போராட்டத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

05) ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக் கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகாரநீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகளின் மீள்நிகழாமையை உறுதி செய்யவேண்டும். இதுவரையிலுமான ஐநா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக, ஐநா பொதுச்செயலரின் பொறுப்புகூறலை ஐநா பொதுச்சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும்.

06) அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும், நமது வளங்கள் இனஅழிப்பின் ஒருபகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும். இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு, புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

07) எமது நாட்டின் கடல் வளங்கள் அழிக்கப்படுவதை தடுப்பதற்கும், கடற்றொழிலாளர்கள் சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமான வகையில், 2016ஆம் ஆண்டில் இலங்கை இந்திய அரசுகள் மேற்கொண்ட கூட்டு இணக்கத்தின் அடிப்படையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தல், 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கமற்றும் 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சட்டங்களை உறுதியான முறையில் நடைமுறைப்படுத்துதல், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலுவாக்குதல், மீனவக் கிராமங்களிலிருந்து படைத்தரப்பினர் வெளியேறுதல போன்ற நடவடிக்கைகள் மூலம் அம்மக்களின் பாதுகாப்பும் வாழ்வாதாரங்களும் உறுதிப்படுத்தப் படவேண்டும்.

08) ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும், தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று (Protective Mechanism) உருவாக்கப்படவேண்டும்.

மேற்கூறப்பட்ட, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ்மக்களும் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வெளிக்காட்ட சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டிநிற்கின்றோம்.


தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருமித்தகுரலில் ஒலிக்கச் செய்வதற்காகவும், பலமான கட்டமைப்புடனான அரசியல் தீர்வை கோரவும், அதற்கான அழுத்தங்களை தென்னிலங்கையின் முற்போக்கு சக்திகளுடாகவும் சர்வதேச சக்திகளுடாகவும் மேற்கொள்ளவும் இத்தேர்தலை ஒரு சந்தர்ப்பமாக எமது மக்கள் கையாளவேண்டும்.

சங்கு சின்னத்திற்கு வழங்கப்படும் வாக்குகள், தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்கள் வழங்கும் வாக்குகளாகவே அமையும்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக, தமிழ் மக்களின் தேசியக் கடமையாக சங்குச் சின்னத்துக்கு ஆகக்கூடிய வாக்குகளை வழங்குவதன் மூலம் எங்கள் கோரிக்கைகளை நாங்களே வெற்றி பெறவைப்போம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024






## த. சித்தார்த்தன்

(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

யாழ் - கிளிநொச்சி மாவட்ட

முதன்மை வேட்பாளர்

**5**



**6**

## பா. கஜதீபன்

ஆசிரியர், முன்னாள் மாகாண சபை

உறுப்பினர்

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி (DTNA)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org